# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை** : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
******

**ஆணை எண்: 119 /பேரூ/2026**
**நாள் : 28 .07.2026**

மு. லிங்கேசன்,
சங்கரன்பாளையம்,
வேலூர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
திருநெல்வேலி மண்டலம்,
திருநெல்வேலி மாவட்டம். – எதிர் மனுதாரர்

வேலூர் மாவட்டம், சங்கரன்பாளையம், 17/5C, LIC காலனி என்ற முகவரியில் வசிக்கும் திரு. மு. லிங்கேசன் என்பவரது 22.03.2026 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 25.03.2026 அன்று பெறப்பட்டு, 119/பேரூ/2026 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

வேலூர் மாவட்டம், சங்கரன்பாளையம், 17/5C, LIC காலனி என்ற முகவரியில் வசிக்கும் திரு. மு. லிங்கேசன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்த தனது 22.03.2026 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

நான் திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநராக பணிபுரிந்து வந்த என்னை நிர்வாக காரணங்களால் தற்காலிக பணியிடை நீக்கம் செய்து கடந்த 14.08.2023ஆம் தேதிய அரசாணை (D) எண். 474 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.3) துறை மூலம் 30.06.2008 பிற்பகல் முதல் ஓய்வு பெற அனுமதித்து அரசாணை வெளியிடப்பட்டது.

2. திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 873/2008/ப2 நாள் 30.11.2023 மூலமாக என் வயது முதிர்வு காரணமாக 30.06.2008ல் ஓய்வு பெற அனுமதித்து ஆணையிடப்பட்டதில் எனக்கு 01.10.2006க்கு பின்னர் ஊதிய உயர்வு (Increment) வழங்கப்படாததையும் 27.07.2007 அன்று உதவி இயக்குநராக பதவி உயர்வு பெற்றதில் திருத்திய ஊதியம் (Pay fixation) நிர்ணயம் செய்து உத்தரவு இட்டுள்ளார்கள்.

3. மாவட்ட ஆட்சித்தலைவர், திருநெல்வேலி ஆணையிட்டபின் அரசாணை நிலை எண். 234 நிதி (ஊதியக் குழு) துறை நாள் 01.06.2009ன்படி 01.01.2006 முதல் கருத்தியலாகவும் மற்றும்

01.01.2007 முதல் பணப் பயன்கள் வழங்கவும் ஆணையிட்டுள்ளதை சுட்டிக்காட்டி எனக்கு 01.01.2007 முதல் 30.06.2008 வரை கிடைக்க வேண்டிய நிலுவை சம்பளம் மற்றும் படிகள் பட்டியல் ரூ.97,633/- தயாரித்து அனுப்பப்பட்டுள்ளது .

பட்டியலில் கண்ட தொகையினை பெற்றுத் தரக் கோரியதில் ரூ.59,891/- மட்டுமே வரப்பெற்றேன். மீதி தொகையான ரூ.37,742/- இன்று வரை கிடைக்கப் பெறவில்லை. மேற்படி தொகையினை பெற்றுத் தராததால் கடந்த 05.08.2024, 03.12.2024 மற்றும் 18.01.2025 ஆகிய தேதிகளில் பதிவு தபால்கள் அனுப்பியும் இன்று வரை நிலுவைத் தொகை கிடைக்கப் பெறவில்லை.

4. எனக்கு தமிழ்நாடு அரசு 1984ல் சிறப்பு பிற்கால வைப்பு நிதி கணக்கினை முடிவு செய்து வட்டியுடன் தொகையை பெற்றுத் தரவும் நேரிலும், தொலைபேசி மூலமாகவும் பதிவு தபால்கள் மூலம் கடந்த 05.08.2024, 03.12.2024 மற்றும் 18.011.2025 தேதிகளில் கடித தொடர்பு கொள்ளப்பட்டது என கோரிக்கைகள் யாவும் ஒருவழிப்பாதையாக இருந்ததேயொழிய தீர்வு காணப்படவில்லை.

5. எனக்கு தற்சமயம் 76 வயதாகிறது. வயோதிக காலத்தில் ஏற்படும் இயற்கை வியாதிகளான ரத்த கொதிப்பு, சக்கரை வியாதி, இருதய நோய் போன்றவைகளில் பாதிக்கப்பட்டுள்ளதால் நோய்களை தீர்க்க உண்டான மருத்துவரை ஆலோசிக்கவும் அவரின் அறிவுரைப்படி மருந்துகள் வாங்கவும் போதிய நிதிவசதி இல்லாத காலத்தில் எனக்கு கிடைக்க வேண்டிய நிலுவை பணப்பயன்கள் கிடைத்தால் நன்றாக இருக்கும் என்று கெஞ்சியும் என் மீது கருணை காட்டாமல் எனக்கு கிடைக்க வேண்டிய நிலுவைத் தொகையை பெற்றுத் தரவில்லை என்பதை சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

6. என் கோரிக்கை கடிதங்களுக்கும் அவ்வப்பொழுது தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டும் உரிய நிவாரணம் கிடைக்காமையால் கடந்த 15.09.2025 அன்று எனக்கு வேண்டிய நிலுவை சம்பளம் மற்றும் படிகள் மற்றும் தமிழ்நாடு அரசு 1984ஆம் சிறப்பு பிற்கால வைப்பு நிதியுடன் கூடிய தற்போதைய காலவரையிலான வட்டியினையும் பெற வழிவகை செய்ய வேண்டி மாண்புமிகு முதலமைச்சரின் தனிப்பிரிவுக்கு புகார் செய்திருந்தும், எனக்கு சேர வேண்டிய தொகை கிடைக்கப்பெறவில்லை.

7. கடந்த 03.12.2025ஆம் தேதியில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005ன் கீழ் பொது தகவல் அளிக்கும் அலுவலர், பேரூராட்சிகள் உதவி இயக்குநர் அலுவலகம், திருநெல்வேலி அவர்களிடம் இருந்து தகவல்கள் கேட்கப்பட்டது.

8. பொது தகவல் அலுவலர் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம், திருநெல்வேலி அவர்கள் நான் சொந்த விவகாரமாக தகவல் கேட்டால் ஒரு நபரால் கொடுக்கப்பட்ட மனு குறித்தோ அல்லது அம்மனு மீதான நடவடிக்கை குறித்தோ அல்லது அம்மனுவின் மீது என்ன மாதிரியான நடவடிக்கைகள் மேற்காள்ளப்பட்டது என்பது குறித்தோ தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கேட்க இயலாது என உத்திரவிடப்பட்டுள்ளது என்ற விவரம் தகவலாக வழங்கப்படுகிறது என்று தெரிவித்துள்ளார்.

9. மீண்டும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005ன்படி மேல்முறையீடு செய்யப்பட்டது. மேல்முறையீட்டு அலுவலர் பொது தகவல் அளிக்கும் அதிகாரி அளித்த அதே பதிலையே அனுப்பியுள்ளார்.

10. என் வயது, உடல்நிலை குறித்தும் அவ்வப்பொழுது கடிதங்கள் மூலமாகவும், தொலைபேசி மூலமாக பேசியும் மாண்புமிகு முதலமைச்சரின் தனிப்பிரிவு, சென்னை-9 அவர்களுக்கு புகார் செய்தும் இன்று வரை எனக்கு கிடைக்க வேண்டிய பணப்பயன்கள் கிடைக்கப் பெறாமையால் நான் மிகவும் மனதளவில் பாதிக்கப்பட்டுள்ளதோடு கடித

போக்குவரத்தினால் தேவையில்லாமல் செலவிட வேண்டியுள்ளது என்பதை சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

11. எனவே என் பிரச்சனைகளை உரிய தகவல்களை ஆவண சாட்சிகளுடன் சமர்ப்பித்துள்ளதை எற்று,

- எனக்கு கிடைக்க வேண்டிய நிலுவை சம்பளம் மற்றும் படிகளான ரூ.37,742-யை பெற்றுத்தர ஆணையிட வேண்டுகிறேன்.
- மேற்படி தொகைக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆணையிட்ட தேதியான 30.11.2023ல் இருந்து நிலுவைத்தொகை ரூ.37,742க்கு 18% வட்டியுடன் அளிக்க ஆணையிட வேண்டுகிறேன்.
- தமிழ்நாடு அரசு 1984ன் சிறப்பு வைப்பு நிதித் தொகையை இன்றைய தேதி வரை வட்டியுடன் பெற்றுத்தர ஆணையிட வேண்டுகிறேன்.
- உரிய நேரத்தில் நிலுவை பணப்பயன் கிடைக்காமையால் எனக்கு எற்பட்ட மனஉளைச்சலுக்காக உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) திருநெல்வேலி அவர்களிடம் இருந்து ரூ.25,000-யை மான நஷ்ட ஈடு வழங்க ஆணையிட வேண்டுகிறேன்.
- தேவையில்லாமல் எனக்கு கடந்த மூன்று ஆண்டுகளாக எற்பட்ட செலவினங்களான டைப்சார்ஜ் நகல் எடுத்த ஜிராக்ஸ் செலவு, ஸ்டேஷனரி செலவு மற்றும் பதிவு தபால்கள் மூலம் ஆன செலவு ஆக ரூ.5,000-/ உரிய அலுவலர் வழங்க ஆணையிட வேண்டுகிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 30.04.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது.

3. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், திருநெல்வேலி மண்டலம் தனது 23.05.2026 நாளிட்ட அறிக்கை ந.க.எண். 873/2008/ப2-ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

"திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநராக பணியாற்றி வந்த திரு. மு. லிங்கேசன் என்பவரை அன்னார் மீது நிலுவையில் இருந்த ஒழுங்கு நவடிக்கைகள் காரணமாக அன்னாரின் வயது முதிர்வின் நாளான 30.06.2008 அன்று ஓய்வு பெற அனுமதிக்காமல் தற்காலிக பணி நீக்கம் செய்து அரசாணை எண். 275 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பே.ரூ.4) துறை, நாள் 28.06.2008ன்படி ஆணையிடப்பட்டும், தொடர்ந்து அவரை அரசாணை எண். 276 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பே.ரூ.4) துறை, நாள் 28.06.2008ன்படி பணி நீட்டிப்பில் பணி உரிமைகளை முடக்கி வைத்து ஆணையிடப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து தனியர் மீதான தற்காலிக பணிநீக்கத்தினை அரசாணை எண். 474 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பே.ரூ.4) துறை, நாள் 14.08.2023ல் வெளியிடப்பட்ட அரசாணையின்படி விலக்கிக்கொண்டு அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை 1978ஆம் ஆண்டைய தமிழ்நாடு ஓய்வூதிய விதிகளின் கீழ் தொடரப்படும் என ஆணையிடப்பட்டுள்ளது.

மேலும், இத்தனியர் மீதான ஒழுங்கு நடவடிக்கை முடிக்கப்பட்டு அரசாணை எண். 568 நகராட்சி நிர்வாகம் மறறும் குடிநீர் வழங்கல் (பே.ரூ.4) துறை, நாள் 29.09.2023ல் வெளியிடப்பட்ட அரசாணையில் தண்டனையாக ரூ.500 வீதம் ஓய்வூதியத்திலிருந்து ஓராண்டிற்கு பிடித்தம் செய்யப்பட வேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது.

தற்போது, மேற்படி திரு. மு. லிங்கேசன் என்பவரால் தனக்கு உதவி இயக்குநர் பணியிடத்தில் ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டு நிலுவை ஊதியம் வழங்கியதில் குறைவாக வழங்கப்பட்டது என்றும், சிறப்பு சேமநலநிதி திட்ட பணப்பயன்கள் வழங்கப்படவில்லை எனவும் புகார் செய்து தமிழ்நாடு உள்ளாட்சி முறைமன்ற நடுவத்திற்கு வழங்கியுள்ள புகார் சம்பந்தமாக கீழ்க்கண்டவாறு அறிக்கை பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

1. இவர் சிறப்புநிலை செயல் அலுவலராக பணியாற்றி வந்த நிலையில், அரசாணையின்படி இவருக்கு உதவி இயக்குநராக பதவி உயர்வு வழங்கப்பட்டு 27.07.2007ல் திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநராக பணி பொறுப்பேற்று பணிபுரிந்து வந்துள்ளார்.

2. இவர் திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநராக பணிபுரிந்த வந்த நிலையில், பணிப்பதிவேடு அரசிடமிருந்து வர தாமதமானதால், அப்பணியிடத்தில் ஊதியம் நிர்ணயம் செய்யப்படவில்லை.

3. இவர் 01.07.2008 முதல் தற்காலிக பணிநீக்கத்தில் இருந்து வந்த நிலையில் இவருக்கு இவ்வலுவலகம் மூலம் ஊதிய பட்டுவாடா பதிவேடு அனுசரித்து பிழைப்பூதியம் செப்டம்பர் 2023 வரை வழங்கப்பட்டு வந்துள்ளது.

4. இவரை 14.08.2023ல் அரசால் 30.06.2008 முதல் ஓய்வு பெற அனுமதித்து ஆணையிடப்பட்டுள்ளதைத் தொடர்ந்து இவரால் 18.10.2023ல் தன்னுடைய ஊதியத்தினை 6வது மற்றும் 7வது நிதி ஆணைய பரிந்துரைப்படி திருத்தியமைத்து உத்தரவிட வேண்டியதின் பேரில் இவருடைய ஊதியம் 01.10.2007ல் சிறப்பு நிலை செயல் அலுவலர் பணியிடத்தில் ஒரு ஊதிய உயர்வு வழங்கி அதன் பின்னர் உதவி இயக்குநர் பணியிடத்தில் ரூ.15600-39100 தர ஊதியம் ரூ.5400 என்ற ஊதிய விகிதத்தில் அடிப்படை ஊதியம் ரூ.23540—என நிர்ணயம் செய்து ஆணையிடப்பட்டது.

5. அதனைத் தொடர்ந்து இவருக்கு மேற்கூறியவாறு ஊதிய நிர்ணயம் அடிப்படையில் 26.07.2007 முதல் 27.06.2008 முடிய உள்ள காலத்திற்கு இவ்வலுவலக ஊதிய பட்டுவாடா பதிவேடு அனுசரித்து நிலுவை ஊதியம் ரூ.59891/- VR.No.15792917, நாள் 24.05.2024ன்படி கருவூலகத்தில் பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டு வரவாக்கப்பட்டுள்ளது.

6. மனுதாரரால் அளிக்கப்பட்டுள்ள புகார் மனுவில் இணைக்கப்பட்ட ஊதிய நிலுவை கணக்கீட்டு படிவத்தில் இவர் பெற்ற ஊதியம் ஜனவரி 2007 முதல் செப்டம்பர் 2007 வரை ரூ.8900/- எனவும், அக்டோபர் 2007 முதல் டிசம்பர் 2007 வரை ரூ.9375/- எனவும், ஜனவரி 2008 முதல் ஜுன் 2008 வரை ரூ.9650/- எனவும் கணக்கில் கொண்டு நிலுவை ஊதியமாக ரூ.97,633/- என கணக்கீடு செய்துள்ளார். இவ்வாறு கணக்கீடு செய்ததில் ஏற்கனவே பெற்ற ரூ.59,891/- போக எஞ்சிய ரூ.37,742/- (97633 – 59891) எனவும் அதற்கான வட்டித் தொகையினை 18 சதவீத வட்டியில் தரவும் கோரியுள்ளார்.

7. ஆனால் இவருக்கு இவ்வலுவலகத்தில் பணியாற்றிய காலத்திற்கு ஜுலை 2007 முதல் செப்டம்பர் 2007 முடிய ரூ.9,100/- எனவும் அக்டோபர் 2007 முதல் ஜுன் 2008 முடிய ரூ.9,650/- என இவருடைய பணிப்பதிவேடு அனுசரித்து

இவ்வலுவலகம் மூலம் நிலுவைத் தொகை கணக்கிடப்பட்டு அதன்படி வந்த நிலுவைத் தொகை ரூ.59,891/- சரியாகவே வழங்கப்பட்டுள்ளது. மேலும், ரூ.9100/-க்கான ஊதிய நிலுவையானது திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந .க. எண். 2012/2007/ப2 நாள் 31.10.2007ன்படி வழங்கப்பட்டுள்ளது.

8. இதற்கான ஊதிய பட்டுவாடா பதிவேடு நகல் மற்றும் பணிப்பதிவேடு நகல் இத்துடன் இணைக்கப்படுகிறது.

9. இவருடைய சிறப்பு சேமநலநிதி திட்ட பங்களிப்புத் தொகை, வட்டித் தொகை மற்றும் அரசு பங்குத் தொகை ஆகியன அனுமதித்து ஆணையிடப்பட்டு மொத்தம் ரூ.18,911/- இவருடைய வங்கி கணக்கில் வரவாக்க கருவூலகத்தில் பட்டியல் சமர்ப்பிக்க நடவடிக்கையில் உள்ளது.

ஆகவே, திரு. மு. லிங்கேசன் என்பவருக்கு இவ்வலுவலகம் மூலம் அவருக்குரிய ஊதிய நிர்ணய நிலுவைத் தொகை சரியாகவே கணக்கிடப்பட்டு வழங்கப்பட்டுள்ளது என்பதுடன், சிறப்பு சேமநலநிதி தொகையில் அனுமதித்து ஆணையிடப்பட்டுள்ளது என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. மேலும், ஆவண நகல்கள், ஊதிய பட்டுடவாடா நகல்கள் இத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், திருநெல்வேலி மண்டலம் ஆகியோரை இம்முறைமன்ற நடுவத்தில் 01.07.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 16.06.2026 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திரு. மு. லிங்கேசன் என்பவர் இம்முறைமன்ற நடுவத்தில் 01.07.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- "நான் 27.07.2007 அன்று முதல் திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநராக பணிபுரிந்து வந்த நிலையில் நிர்வாக காரணத்தினால் 28.06.2008 அன்று பணியிடை நீக்கம் செய்யப்பட்டு, வயது முதிர்வு நாளான 30.06.2008 அன்று என்னை பணி ஒய்வு அனுமதி அளிக்கப்படாமல் தொடர்ந்து பணி நீட்டிப்பு வழங்கி ஆணையிடப்பட்டது.
- இதனை தொடர்ந்து அரசாணை (D) எண். 474, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 14.08.2023ல் என்னை 30.06.2008 பிற்பகல் முதல் ஓய்வு பெற அனுமதியளிக்கப்பட்டதை தொடர்ந்து 1978ஆம் ஆண்டு தமிழ்நாடு ஓய்வூதிய விதிகளின் கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 29.09.2023 நாளிட்ட அரசாணையில் தண்டனையாக மாதம் ரூ.500 வீதம் ஓய்வூதியத்தில் 1 ஆண்டுக்கு பிடித்தம் செய்ய ஆணையிடப்பட்டது.
- திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவரின் 30.11.2023 நாளிட்ட செயல் முறைகள் ஆணையில் 01.01.2006 முதல் கருத்தியலாகவும் மற்றும் 01.01.2007 முதல் பணப் பலன்கள் வழங்கவும் ஆணையிடப்பட்டது.

- இதன் அடிப்படையில் 01.01.2007 முதல் 30.06.2008 வரையிலான காலத்திற்கு எனக்கு சேர வேண்டிய பணப் பலன்கள் ரூ.97,633 என கணக்கிடப்பட்டு பட்டியல் என்னால் அனுப்பப்பட்டது. இதன் நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

- ஆனால் பட்டியலின்படி எனக்கு சேர வேண்டிய ரூ.97,633ல் எனக்கு ரூ.59,891 தொகை மட்டுமே கிடைக்கப் பெற்றுள்ளது. மீதமுள்ள ரூ.37,742 தொகை இந்நாள் வரை கிடைக்கப்பெறவில்லை.

- மேலும் தமிழ்நாடு அரசு 1984ன் சிறப்பு வைப்பு நிதித் தொகை ரூ.18,911 தொகை என்னுடைய வங்கி கணக்கில் உதவி இயக்குநர் அலுவலகம் மூலம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் இத்தொகைக்கான விவரங்கள் அடங்கிய திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரால் வெளியிடப்பட்ட செயல்முறைகள் ஆணை எனக்கு வழங்கப்படவில்லை. மேலும் இத்திட்டத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற தொகை சரியானது அல்ல. இச்செயல் 30.06.2008 தேதியுடன் முடிந்துவிட்ட நிலையில் 01.07.2008 முதல் 30.06.2026 வரையிலான காலத்திற்கு வட்டி கணக்கிடப்பட வேண்டும் என இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரரான திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் திரு. வ. சுலைமான்சேட் என்பவர் தனது 29.06.2026 நாளிட்ட கடித ந.க. எண். 826/2008/ப2ல் பேரூராட்சி நிர்வாக காரணமாக 01.07.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு தன்னால் வர இயலாது எனவும் தனது சார்பாக புகார் மனு தொடர்பான கோப்பினை பராமரித்து வரும் உதவியாளர் திரு. சி. ரமேஷ்குமார் என்பவரை விசாரணைக்கு ஆஜராக அனுமதி அளிக்குமாறு கோரியுள்ளார்.

7. எதிர்மனுதாரரான திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் கோரிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தால் ஏற்கப்பட்டது. அதன்படி திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்தின் உதவியாளர் திரு. சி. ரமேஷ்குமார் என்பவர் 01.07.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- மனுதாரர் திரு. மு. லிங்கேசன் என்பவர் 27.07.2007 முதல் பதவி உயர்வு மூலம் திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநராக பணிபுரிந்து வந்தபோது, ஏற்கனவே இவர் மீது நிலுவையிலுள்ள ஒழுங்கு நடவடிக்கையில், இவரது வயது முதிர்வு காரணமாக 30.06.2008 அன்று பணியிலிருந்து ஓய்வு பெற அனுமதிக்காமல் பணியிடை நீக்கம் செய்தும் மற்றும் பணி நீட்டிப்பு செய்யப்பட்டும் ஆணைகள் வெளியிடப்பட்டன.

- இவர் மீதான ஒழுங்கு நடவடிக்கையில் அரசு ஆணை எண். 474, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 14.08.2023ல் ஓய்வூதிய விதிகளின் கீழ் நடவடிக்கை தொடர ஆணையிடப்பட்டு, அரசு ஆணை எண். 568 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 29.09.2023ல் தண்டனையாக ஓய்வூதியத்திலிருந்து மாதம் ரூ.500 வீதம் ஒரு வருடத்திற்கு பிடித்தம் செய்திட ஆணை வெளியிடப்பட்டது.

- திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவரின் 30.11.2023 நாளிட்ட செயல்முறைகள் ஆணையில் 01.01.2006 முதல் கருத்தியலாகவும் மற்றும் 01.01.2007 முதல் பணப் பலன்கள் வழங்கவும் ஆணையிடப்பட்டது.

- மனுதாரரால் அளிக்கப்பட்ட புகார் மனுவில் இணைக்கப்பட்ட ஊதிய நிலுவை கணக்கீட்டு படிவத்தில் இவர் பெற்ற ஊதியம் ஜனவரி 2007 முதல் செப்டம்பர் 2007 வரை ரூ.8900-/

எனவும், அக்டோபர் 2007 முதல் டிசம்பர் 2007 வரை ரூ.9375-/ எனவும், ஜனவரி 2008 முதல் ஜூன் 2008 வரை ரூ.9650-/ எனவும் கணக்கில் கொண்டு நிலுவை ஊதியமாக ரூ.97,633-/ என கணக்கீடு செய்துள்ளார். இவ்வாறு கணக்கீடு செய்ததில் ஏற்கனவே பெற்ற ரூ.59,891-/ போக எஞ்சிய ரூ.37,742/- (97633 – 59891) எனவும் அதற்கான வட்டித் தொகையினை 18 சதவீத வட்டியில் தரவும் கோரியுள்ளார்.

- ஆனால், இவருக்கு இவ்வலுவலகத்தில் பணியாற்றிய காலத்திற்கு ஜூலை 2007 முதல் செப்டம்பர் 2007 முடிய ரூ.9100-/ எனவும் அக்டோபர் 2007 முதல் ஜூன் 2008 முடிய ரூ.9650/- என இவருடைய பணிப்பதிவேடு சரிபார்த்து இவ்வலுவலகம் மூலம், நிலுவைத் தொகை கணக்கிடப்பட்டு அதன்படி வந்த நிலுவைத் தொகை ரூ.59,891-/ சரியாகவே வழங்கப்பட்டுள்ளது. மேலும் ரூ.9100-க்கான ஊதிய நிலுவையானது திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க. எண். 2012/2007/U2 நாள் 31.10.2007ன்படி வழங்கப்பட்டுள்ளது. இதன் கணக்கீட்டு பட்டியலின் நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

- மனுதாரர் திரு. லிங்கேசன் 01.01.2007 முதல் 26.07.2007 முடிய காலத்திற்கு நிலுவை ஊதியமானது வழங்கப்பட வேண்டும் என்ற நிலையில், இவர் இக்கால கட்டத்தில் நகராட்சி நிர்வாகத்தில் பணியாற்றி வந்துள்ளதால் நிலுவைத் தொகையானது அத்துறை மூலமே வழங்கப்பட வேண்டும்.

- இந்நிலையில், இவருக்கு 15.07.1992 முதல் 01.10.2005 முடிய உள்ள காலத்திற்கு திருத்தி அமைக்கப்பட்ட ஊதியத்தில் மிகை ஊதியம் வழங்கப்பட்டதால் அதனை பிடித்தம் செய்திட ஆணையிடப்பட்ட விவரம் அவரது பணிப்பதிவேட்டின் மூலம் தெரிய வருகிறது. ஆனால் இத்தொகை பிடித்தம் செய்யப்பட்ட விவரம் ஏதும் பணிப்பதிவேட்டில் பதியப்படவில்லை என்பதனை கருத்திற்கொண்டு, திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்தில் பணியாற்றிய காலத்திற்கு மட்டுமே நிலுவை ஊதியம் நிர்ணயம் செய்து வழங்கப்பட்டுள்ளது.

- மேலும் திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகள் உதவி இயக்குநரின் 21.05.2026 நாளிட்ட செயல்முறைகள் ஆணையில் மனுதாரருக்கு சேர வேண்டிய சேமநல நிதி திட்ட பங்களிப்பு தொகை, வட்டி தொகை மற்றும் அரசு பங்குத் தொகை என மொத்தம் ரூ.18,911 கணக்கிடப்பட்டு மனுதாரரது வங்கி கணக்கில் 27.05.2026 அன்று செலுத்தப்பட்டுள்ளது.

- மேற்காணும் சிறப்பு சேமநல நிதி திட்ட பங்களிப்பு தொகை ரூ.18,911க்கான செயல்முறைகள் ஆணையின் நகல் ஓரிரு தினங்களில் வழங்கப்படும் என தெரிவித்துக்கொள்கிறேன்.

- மனுதாரருக்கு 01.01.2007 முதல் 26.07.2007 வரையிலான காலத்திற்கு வழங்கப்பட வேண்டிய ஊதிய நிலுவைத் தொகை குறித்து, அவர் மேற்காணும் காலக்கட்டத்தில் பணியாற்றிய சம்பந்தப்பட்ட நகராட்சி மற்றும் பேரூராட்சி துறைகள் மூலம் நிர்ணயம் செய்யப்பட்டதை சரிபார்த்து அதன் அடிப்படையில் ஒருங்கிணைந்த ஊதிய நிலுவை தொகை வழங்குவதற்கு திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் மூலம் உரிய நடவடிக்கை மேற்கொண்டு இரண்டு மாத காலத்திற்குள் வழங்கப்படும் என இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

7. மனுதாரரின் புகார் மனு, அவரது வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் அறிக்கை மற்றும் திருநெல்வேலி மண்டல

பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்தில் பணிபுரியும் உதவியாளரின் வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

மனுதாரர் திரு. மு. லிங்கேசன் என்பவர் 27.07.2007 அன்று முதல் திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநராக பணிபுரிந்து வந்த நிலையில் அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அவரது வயது முதிர்வு நாளான 30.06.2008 அன்று பணி ஒய்வு அனுமதி அளிக்கப்படாமல் தொடர்ந்து பணி நீட்டிப்பு வழங்கி ஆணையிடப்பட்டது என்பதையும், இதனை தொடர்ந்து மனுதாரரை 30.06.2008 அன்று பணியிலிருந்து ஒய்வு பெற அனுமதித்து, 1978ஆம் ஆண்டு தமிழ்நாடு ஓய்வூதிய விதிகளின் கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 29.09.2023 நாளிட்ட அரசாணையில் தண்டனையாக மாதம் ரூ.500 வீதம் ஓய்வூதியத்தில் 1 (ஒரு) ஆண்டிற்கு பிடித்தம் செய்ய ஆணையிடப்பட்டது என்பதையும் மனுதாரரின் வாக்குமூலம் வாயிலாக அறிய வருகிறது.

மேற்காணும் நிலையில் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவரின் 30.11.2023 நாளிட்ட செயல்முறைகள் ஆணையில் 01.01.2006 முதல் கருத்தியலாகவும் மற்றும் 01.01.2007 முதல் பணப்பலன்கள் வழங்கவும் என ஆணையிடப்பட்டதன் அடிப்படையில் 01.01.2007 முதல் 30.06.2008 வரையிலான காலத்திற்கு மனுதாரருக்கு சேர வேண்டிய பணப்பலன்கள் ரூ.97,633 தொகையில் தனக்கு ரூ.59,891 மட்டுமே திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரால் வழங்கப்பட்டுள்ளது எனவும், மீதமுள்ள ரூ.37,742 தொகை இந்நாள்வரை வழங்கப்படவில்லை எனவும், மேலும் தனக்கு வழங்கப்பட்ட 1984ன் சிறப்பு வைப்பு நிதித்தொகையான ரூ.18,911க்கு விவரங்கள் மனுதாரருக்கு வழங்கப்படவில்லை என்பதையும் மனுதாரரின் வாக்குமூலம் வாயிலாக தெரிய வருகிறது.

மேற்காணும் மனுதாரரின் புகார் குறித்து, மனுதாரர் திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநராக பணிபுரிந்த காலமான 27.07.2007 முதல் 30.06.2008 வரையிலான காலத்திற்கு ஊதிய நிலுவை தொகை ரூ.59,891 என கணக்கிடப்பட்டு வழங்கப்பட்டுள்ளது எனவும், ஆனால் 01.01.2007 முதல் 26.07.2007 முடிய காலத்திற்கான நிலுவை ஊதியமானது மனுதாரருக்கு வழங்கப்பட வேண்டிய நிலையில், அவர் அக்காலகட்டத்தில் நகராட்சி நிர்வாகத்தில் பணியாற்றி வந்துள்ளதால் நிலுவைத் தொகையானது அத்துறை மூலமே வழங்கப்பட வேண்டும் எனவும், இருப்பினும் மனுதாரருக்கு 01.01.2007 முதல் 26.07.2007 வரையிலான காலத்திற்கு வழங்கப்பட வேண்டிய ஊதிய நிலுவைத் தொகை குறித்து, அவர் மேற்காணும் காலக்கட்டத்தில் பணியாற்றிய சம்பந்தப்பட்ட நகராட்சி மற்றும் பேரூராட்சி துறைகள் மூலம் நிர்ணயம் செய்யப்பட்டதை சரிபார்த்து அதன் அடிப்படையில் ஒருங்கிணைந்த ஊதிய நிலுவை தொகை வழங்குவதற்கு திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் மூலம் உரிய நடவடிக்கை மேற்கொண்டு இரண்டு மாத காலத்திற்குள் வழங்கப்படும் என தெரிவித்திருப்பதை திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் அலுவலகத்தில் பணிபுரியும் உதவியாளரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

மேற்காணும் நிலையில், திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் அலுவலகத்தில் பணிபுரியும் உதவியாளர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளபடி, மனுதாரருக்கு வழங்கப்பட வேண்டிய 01.01.2007 முதல் 26.07.2007 வரையிலான காலத்திற்கான ஊதிய நிலுவைத் தொகையினை மனுதாரர் பணியாற்றிய சம்பந்தப்பட்ட துறைகள் மூலம் நிர்ணயம் செய்யப்பட்டு, அதன் ஒருங்கிணைந்த ஊதிய நிலுவை தொகையினை 2 மாத காலத்திற்குள் மனுதாரருக்கு வழங்கிடுமாறு திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

மேலும் மனுதாரருக்கு வழங்கப்பட்ட சிறப்பு சேமநல நிதி திட்ட பங்களிப்பு தொகை ரூ.18,911க்கான செயல்முறைகள் ஆணையினை மனுதாரருக்கு வழங்கியதை உறுதி

செய்திடுமாறும் திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 28–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. மு. லிங்கேசன்,
   17/5C, LIC காலனி,
   சங்கரன்பாளையம்,
   வேலூர் மாவட்டம்.
2. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், திருநெல்வேலி மண்டலம்,
   திருநெல்வேலி மாவட்டம்.
3. பேரூராட்சிகளின் இயக்குநர்,
   பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
   இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.
4. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).
   (பெயரிட்ட உறையில்)
   பேரூராட்சிகளின் இயக்குநரகம், இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர்,
   சென்னை–600 028.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

செயலாளர்